Kalanjiyam International Journal of Tamil Studies
களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.15
https://ngmtamil.in/

# திருக்குறளில் அறம்

**எஸ்.அசோக்குமார்**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்(நாமக்கல்)

**முனைவர் சி.சுப்ரமணியன்**,

இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி, வேலூர்(நாமக்கல்)

பிற்காலத்தில் சூடாமணி நிகண்டின் ஆசிரியரான மண்டல புருடர், மனிதன் தனக்கென வரையறுத்துக்கொண்ட ஒழுக்க முறைகளின் முழு நிறை வடிவமே அறம் என்று கூறுவர். பண்டைத் தமிழ் மக்கள் தனிமனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தினைக் கருதினர். திருவள்ளுவர் இல்லறம், துறவறம் என அறத்தை இரண்டாகப் பிரித்து, அறவிதியைக் கூறுவது தமிழரது பண்பாட்டை உணர்த்துவதாகும். தமிழர் நீதிமன்றத்திற்கு அறக்களம் எனப் பெயரிட்டனர். போரிலும் அறநெறி கையாளப்பட்டது. தமிழில் பல அற நூல்கள் தோன்றி அறக்கருத்துக்களை அள்ளி வழங்கியுள்ளது.

**திருக்குறள்**

'உலகப் பொதுமறை' என்று உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரே நூல் திருக்குறள் ஆகும். 133 அதிகாரங்களையும், அறத்துப்பால்,பொருட்பால்,காமத்துப்பால் என்னும் மூன்று பகுதிகளையும் கொண்டது.

இதில் அறத்துப்பால் என்பது 38 அதிகாரங்களை உடையது. அறத்துப்பாலில் அடங்கிய 380 குறள்களின் கருத்துக்களும் அறத்தை செவ்வனே எடுத்துரைக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் அறநெறியுடன் இருக்க வேண்டும் என்று திருக்குறள் எவ்வாறு எடுத்துரைக்கின்றது என்பதைக் காண்போம்.

**அறமும் பண்பாடும்**

'நீதி' என்பது தமிழ்ச்சொல் அன்று. வடமொழிக்கு உரிய சொல்லாகும். கி.பி. ஆறாம் நூற்றாண்டு அளவிலேயே இச்சொல் தமிழ் மொழியில் இடம் பெற்றிருந்தது. இச்சொல் முதன் முதலில் வடமொழியில் நடத்துதல், செலுத்துதல், இயங்குதல் என்ற பொருளில் கையாளப்பட்டது. நீதி என்னும் பொருளை உணர்த்துவதற்கு 'நயன்'என்ற சொல்லை,

"நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று
பண்பின் தலைப்பிரியாச் சொல்"(குறள்.97)

என்னும் குறளில் திருவள்ளுவர் பயன்படுத்தியுள்ளார்.

நீதி என்னும் சொல் தமிழில் ஒழுக்கம், நியாயம், முறைமை, அறநூல் என்ற நால்வகைப் பொருள்களின் பெருவழக்காக வழங்கப்பட்டு வருகின்றது. இதனை,

"நெறியும் நியாயமும் தருமமும் நீதி"(அறயியலும் பண்பாடும், 7)

"மயிலறு நெறி நியாய மரியாதை நீதி" (மேலது,ப15)

என்று வரையறை செய்கிறார்.

வடமொழியாளர் நீதி என்ற சொல்லினை அரசநீதி என்ற பொருளில் வழங்கினர். தமிழில் ஒழுக்கநெறி என்ற பரந்துபட்ட பொருளில் பண்டையத் தமிழ்ச் சான்றோர்கள் பெரிதும் போற்றி வழங்கினர்.

**திருக்குறளில் அறம்**

அறம் எனப்படுவது மனத்திலே எந்த வகையான மாசும் இல்லாமல் இருத்தலாகும். மனத்தூய்மை இன்றிச் செய்யப்படும் எல்லா தான, தருமங்களும் பிறர் தம்மைப் பாராட்டச் செய்யப்படும் ஆரவாரச் செயல்களாகும் என்று 'அறன் வலியுறுத்தல்' அதிகாரத்தில் நான்காவது குறள் எடுத்துரைக்கிறது.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

அகல நீர பிற"(குறள்.34) மேலும்,

"அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்

புறத்த புகழும் இல(குறள்.39) என்ற குறட்பாக்களில் இதனை அறியலாம்.

மனிதன் இன்பத்தை விரும்புகிறவன். ஒருவனுக்குத் தருமம் செய்து, அவன் முகம் மலர அது கண்டு இன்பம் துய்க்கலாம். ஒருவனைத் துன்புறுத்தி அது கண்டு மகிழ்வோரும் சிலர் உண்டு. துன்புறுத்திக் காணும் இன்பம் இன்பமாகாது. அது அறத்துக்குப் புறமே ஒதுக்கி வைக்கப்படும். இவ்வாறு அறத்தினால் உண்டாகும் உண்மையான இன்பத்தைப் பற்றி இக்குறள் எடுத்துரைக்கிறது.

**அன்பு - அறம்**

அன்பிற்கும், அறத்திற்கும் இடையே உள்ள தொடர்பை அன்புடைமை எனும் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது.

"அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்

மறத்திற்கும் அஃதே துணை"(குறள்.76) என்ற குறள் எடுத்துரைக்கிறது.

அதாவது, அன்பின் தன்மையை உணராத சிலர், அறம் செய்வதற்கு மட்டுமே அன்பு துணையாக நிற்கிறது என்பார்கள். ஆனால் அன்பு, கொடூரத்தன்மை, பகைமை முதலியவற்றை ஒழிப்பதற்கும் துணையாக நிற்கின்றது.

" மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து

நோக்கக் குழையும் விருந்து"(குறள்.90)

என்ற குறட்பாவின் மூலம் விருந்தோம்பல் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அறியலாம்.

**நடுவுநிலைமை**

சாதாரண மக்களுக்கும் அன்றாட வாழ்க்கையில் சமுதாயச் சிக்கல்களைத் தீர்த்து வைக்க வேண்டிய கட்டாயம் ஏறபடுகின்றது. சின்னஞ்சிறு வழக்காக இருந்தாலும் நடுவுநிலைமை தவறக்கூடாது என்று,

"கேடும் பெருக்கமும் இல்அல்ல நெஞ்சத்துக்

கோடாமை சான்றோர்க்கு அணி" (குறள்.115)

நடுவுநிலை தவறாமையே உத்தமரின் உயர் குணமாம் என்கிறது. நடுவுநிலைமை தவறாது இருப்பது சான்றோர்க்கு இலக்கணமாகும்.

**அடக்கம்**

மனிதனை பேசும் மிருகம் என்பார்கள். ஆனால் பொறுமையின் மூலம் அவன் எந்த அளவுக்கு பெருமை அடைவான் என்பதனை 'அடக்கமுடைமை' என்னும் அதிகாரம் தெளிவாக எடுத்துரைக்கிறது.

"ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றில்

எழுமையும் ஏமாப் புடைத்து" (குறள்.126)

ஆமையானது நான்கு கால்கள், தலை என ஐந்து உறுப்புகளையும் தன் கூட்டுக்குள் அடக்கி வைத்துக் கொள்வதுபோல் ஒருவன் தான் எடுத்த இந்தப் பிறவியில் தன் ஐம்பொறிகளையும் அடக்கி வைக்கக் கூடிய ஆற்றலை பெற்றிருக்க வேண்டும். ஒரு பிறவியில் கொண்ட அடக்கம் பல பிறவியிலும் நன்மை தரும் என்பதே குறளின் விளக்கமாகும்.

**ஒழுக்கம்**

ஒருவனுக்கு வாழ்க்கையில் பெருமையினைத் தேடித் தருவது அவனுடைய நல்ல நடத்தையே ஆகும் என்பதனை 'ஒழுக்கமுடைமை' எனும் அதிகாரம் எடுத்துரைக்கிறது.

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்"(குறள்.131)

என்ற குறளில் ஒருவன் தன் ஒழுக்கத்தை தன் உயிரைவிடச் சிறந்ததொரு பொருளாகக் கொண்டு பாதுகாக்க வேண்டும். ஒழுக்கம் கெட்டபின் உயிர் வாழ்ந்தும் பயனில்லை, அவன் ஒரு நடைபிணமே என்பதை தெளியலாம்.

**பொறுமை**

மனிதன் தனிச்சிறப்புடன் விளங்குவதற்குப் பொறுமையும், சிறந்ததோர் பண்பாகக் கொண்டார் திருவள்ளுவர். பொறுமையின் சிறப்பைப் பொறையுடைமை என்னும் அதிகாரம் எடுத்துரைக்கிறது.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்

போன்றும் துணையும் புகழ்" (குறள்.156)

பிழை செய்த ஒருவனைத் தண்டித்தவர்க்குத் தண்டித்து விட்டாம் என்று அந்த ஒரு நாளைக்குத்தான் இன்பம் கிடைக்கும். ஆனால் பெரிய மனத்துடன் பொறுத்துக் கொணடவர்க்குப் பூமி அழியும் வரையிலும் புகழ் நிலைத்து நிற்கும் என்று திருக்குறள் கூறுகிறது.

**பொறாமை**

'பொறாமை உள்ள நெஞ்சினை கொள்ளிக் கட்டையால் சுட வேண்டும்' என்பது பழமொழி. பொறாமை எனப்படும் கீழ்த்தரமான ஒரு குணத்தை விட்டொழிய வேண்டும் என்று அழுக்காறாமை அதிகாரம் எடுத்துரைக்கிறது.

"அறன்ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்ஆக்கம்

பேணாது அழுக்கறுப் பான்" (குறள்.163)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

ஒருவனுக்கு மறுமை இன்பம் தருவது அறம். இம்மை இன்பம் தருவது செல்வம். ஆனால், பொறாமை பிடித்தவன் அறம் செய்தலையும் பொருள் ஈட்டலையும் போற்றாது, பிறர் வளர்ச்சியைக் கண்டு மகிழ்வதற்குப் பதிலாக மனம் புழுங்குவான். ஆதலால் அறனும் இல்லை, செல்வமும் இல்லை என்பதே இக்குறளின் விளக்கமாகும்.

**புறங்கூறாமை**

மனித இயல்பு பிறரைப் பற்றி அவர்கள் காணா வழி இழிவாகப் பேசுவது. ஒருவர் காணா நிலையில் வேண்டும் என்றே இகழ்ந்து கூறல் புறங்கூறுலாகும். புறங்கூறாமை எனும் அதிகாரத்தில்,

"அறங்கூறாமை அல்ல செயினும் ஒருவன்

புறங்கூறான் என்றல் இனிது" (குறள்.181)

எனும் குறள் ஒருவன் அறம் பற்றிக் கூறாது (அறச் செயல்களைச் செய்யாது) பாவங்களைச் செய்து வரினும், அவன் புறங்கூறாதவன் என்று பிறரால் சொல்லப்படுவது இனிது என்று கூறுகிறது.

**அறமும் ஒழுக்கமும்**

அறம் என்னும் சொல்லிற்கு 'எதிக்ஸ்' என்று பொருள் விளக்கம் தருகின்றனர் அறிவியலாளர்கள். அறயியல் பற்றிய ஆய்வியல் கலையே 'எதிக்ஸ்' என்பதாகும். மனிதனுடைய நடத்தையின் நன்மை தீமைகளை ஆய்வதே அறிவியல். இதனைத் தமிழ் அறிவியல் எனலாம். மனிதன் நலமாக வாழ்வதற்கும், நலவாழ்வின் பயனாகிய இன்பத்தை அடைவதற்கும், அவன் கடைபிடித்து ஒழுக வேண்டிய நல்ல பழக்கவழக்கங்களையும் தீயவை என்று கடிந்து ஒதுக்க வேண்டிய செயல்முறைகளையும் அறிந்து நல்லவற்றை மட்டும் பின்பற்றி ஒழுகுவதே அறமெனப் போற்றப்பட்டது.

மனம் மாசற்றுத் தூய்மையாக இருக்கும் நிலையே அறம் எனப்படும். மனத்தின் மாசைப் போக்குவதற்கு முயலுவதே அறமாகும். அதற்கு மனத்தில் பொறாமையுணர்வு, அவா, வெகுளி ஆகிய தீய உணர்ச்சிகள் தோன்றாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வுணர்ச்சிகளின் உந்துதலினால் கடுமையான சொற்கள் தோன்றாது காத்து, ஒருவன் நடப்பதே அறமாகும். வள்ளுவர் இதனை,

"அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்

இழுக்கா இயன்றது அறம்" (குறள்.35)

என்று கூறுகிறார். மேலும், இக்குறளில் 'அறம்' என்பது மனதைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் எனும் கருத்தினையும் அறியமுடிகிறது.

பண்டைய தமிழ் இலக்கியங்களில் அறம் என்னும் சொல் ஒழுக்கம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டுள்ளதை,

"அஞ்சுவதஞ்சான் அறனில்" (கலித்.பா.42:46) என்னும் கலித்தொகைப் பாடல் வரியிலும் அறியமுடிகிறது.

**அறமும் ஈகையும்**

ஒரு பொருளும் இல்லாத வறியவர்க்கு ஒரு பொருளைக் கொடுத்து உதவுவதே ஈகை எனப்படும். வருபவர்க்கு இல்லை என்று கூறாது, அவருக்கு வேண்டிய பொருளைக் கொடுத்துதவும் அறச்செயலே ஈகையாகும்.

குறவர், முடவர், செவிடர், ஆதரவற்றோர், நோயாளிகள் போன்ற எளிய மக்களுக்குச் செய்யப்படுகின்ற உதவியே உண்மையான அறம் என்பதை,

"ஆற்றாமக்கள் அரும்பசி களைவார்

மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை" (மணிமேகலை,பா.11:11)

என்னும் மணிமேகலைப் பாடல் வரிகளில் அறிய முடிகிறது.

"அறனும் அன்றே ஆக்கமும் தேய்மற

அருளும் செய்யின் நுமக்கு அறனுமாதுவே

அறம் பெரிதாற்றி அதன் பயன் கொண்மார்

அல்லவைத் தேய அறம் பெருகும்" (புறம்.68)

என்ற பாடல் வழி அறியலாம்.

**அறமும் அறக்கடவுளும்**

அறத்தினைத் தெய்வமாக உருவகப்படுத்திக் கூறுவது உலகின் பல்வேறு நாடுகளிலும் இருந்து வரும் வழக்கமாகும். அறமென்னும் சொல் அறக்கடவுள் என்னும் பொருளில் பண்டையத் தமிழ் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளமையைக் காணலாம். அறம் என்ற சொல்லினாலேயே அறக்கடவுளைக் குறிக்கும் வழக்கம் தொல்காப்பியரிடத்தில் இருந்தமை,

"அறன் அழித்துரைத்தல் ஆங்கநெஞ் சழிதல்" (தொல்.பொருள். 15)

என்ற அடியால் புலனாகிறது. திருவள்ளுவரும் அறம் என்னும் சொல்லை அறக்கடவுளாகச் சுட்டினார் என்பதை,

" என்பிலதனை வெயில் போலக் காயுமே

அன்பி லதனை அறம்" (குறள்.77) என்று விளக்குகிறார்.

**அறமும் கல்வியும்**

கல்விதான் ஒருவனை நல்வழிப்படுத்தும். நடுவுநிலைப் பிறழாது நாடிக் கற்றுக் கொடுப்பது கல்வி மட்டுமே. உடல் நோயைத் தீர்ப்பதற்கு பலவகை மருந்துகள் உள்ளன. ஆனால் உள்ளத்தில் அறியாமை என்ற நோயினை நீக்குவதற்கு இருக்கும் ஒரே மருந்து கல்வியாகும். கல்விதான் உலக வாழ்வை மேம்படுத்தச் செய்கிறது. செல்வமானது ஒருவருக்கு கொடுக்க குறைந்து போகும். ஆனால் கல்வியானது பிறருக்கு கற்றுத்தர கற்றுத்தர அதிகமாகுமே தவிர குறையாது. இத்தகைய சிறப்புடைய கல்வி அறியாமையை நீக்கும் என்பதனை,

"எம்மை உலகத்தும் யாங்காணேம் கல்விபோல்

மம்மர் அறுக்கும் மருந்து" (நாலடி.பா.132)

என்ற பாடல் வழி அறிய முடிகிறது.

ஒருவனுக்கு கல்வி மிக இன்றியமையாதது. அத்தகைய கல்வியை அனைவருக்கும் அளித்தல் வேண்டும். ஒழுக்கத்தைக் கல்விதான் கற்றுத்தர முடியும் என்று அனைத்து தமிழ் நூல்களும் வலியுறுத்துகின்றன.

**இல்லற இலக்கணம்**

பழிப்புக்கு இடமில்லாத இல்வாழ்க்கை இல்லறம் எனப்படுகிறது. இல்லற வாழ்க்கை பண்புடையதாகவும், பயனுடையதாகவும் விளங்குவதற்கு அன்பான உள்ளமும், அதனை ஒட்டிய

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

நல்ல செயல்களும் இருத்தல் வேண்டும். வாழ்ந்து மறைந்தோரை நினைவு கூர்தலும், சுற்றம் பேணலும் ஆகிய கடமைகளை நிறைவேற்றத் தன்னை நிலைப்படுத்திக் கொள்ளுதல் இல்லறமாகும். இதனை,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்த றோம்பல் தலை" (குறள்.43)

"இயம்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை" (குறள்.47)

என்று கூறி இல்லற வாழ்விற்கு மிகச் சிறந்த இலக்கணம் வகுத்துக் கூறுகிறது.

**மனையாள் மாண்பு**

குடும்ப வாழ்க்கையென்பது இரு எருதுகள் பூட்டப்பட்ட வண்டி போன்றது. இருவரின் ஒற்றுமை வாயிலாகவே வாழ்வு சீர்பெறும். எண்ணங்கள் முரண்படும் பொழுது வாழ்வு பாழாகும்.

"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்ற பெரியோர்கள் கூறுவதற்கேற்ப மனைவியானவள் சிறந்த பண்புகளுடனும், அனைவரிடமும் அன்போடும் இருக்க வேண்டும். இத்தகைய மனைவியின் கற்புத் திறனை,

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (குறள்.55)

என்று தனது படைப்பில் வள்ளுவர் இயம்புகிறார்.

**மக்கட் சிறப்பு**

நன்மக்களைப் பெறுவதை விட சிறந்த பேறு வேறேதும் இல்லை. நாம் பெற்ற குழந்தையின் மழலை மொழி செவிக்கு இன்பத்தையும், அவர்களின் குறும்புகள் மனிதிற்கு மகிழ்ச்சியையும் தரவல்லது. அத்தகைய குழந்தையின் செயலை,

"இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்த்தும்" (புறம்.பா.188)

என்று புறநானூறு கூறுகிறது. இதனையே திருக்குறளும்,

"அமிழ்தினும் ஆற்ற இனிதேதம்; மக்கள்
சிறுகை அளாவிய கூழ்" (குறள்.64)

என்று குழந்தைப் பேற்றின் சிறப்பினைக் கூறுகிறது. மேலும், இக்குழந்தை வளர்ந்த நிலையில் கல்வியிலும், வீரத்திலும் சிறந்த வல்லோனாய் விளங்கி தனக்கும் தம் குடிக்கும் பெருமை சேர்க்க வேண்டும். இதனை,

"ஈன்று புறந்தருதல் என்தலைக்கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" (புறம்,பா.172) என்ற புறநானூற்று வரிகளும்,

"மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்லெனுஞ் சொல்" (குறள்.70)

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

என்ற வள்ளுவரின் வரிகளும் விளக்கிக் கூறுகிறது.

**அன்புடைமை**

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிகிலார்
அன்பே சிவமாவது யாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" (திருமூலர், திருமந்திரம், பா.122)

என்ற திருமந்திர வரிகள் அன்பு எனும் சொல்லுக்கு ஆழ்ந்த விளக்கம் உரைக்கிறது. பிற உயிர்கள் மீது காட்டும் அன்பே இறைவனுக்குச் செய்யும் உயரிய வழிபாடு ஆகும். அன்பின்றிச் செய்யும் எச்செயலும் நிறைவுடையதாய் அமைவதில்லை.

அன்பு கொண்ட செயல்பாடே ஒருவன் உயிர் வாழ்வதற்கான ஆதாரமாகும். அன்பில்லா வாழ்வு வெறும் சடப்பொருள் வாழ்வாகவே கொள்ளப்படும். இதனை,

"அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு" (குறள்.80) எனும் குறள் விளக்குகிறது.

**விருந்தோம்பல்**

நம் இல்லம் நாடி வரும் விருந்தினரைப் பத்தடி தூரம் சென்று வரவேற்றல் வேண்டும். அதுபோல விருந்தினர் செல்லும் போதும் பத்தடி பின் சென்று வழியனுப்புதல் மரபாகும். இத்தகைய விருந்தோம்பல் பண்பு தமிழ்க் குடிகளின் தலையாய கடமையாகக் கொள்ளப்பட்டது.

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர்கோடலும் இழந்த என்னை" (சிலம்பு. புகார்.பா.வ.34-35)

எனும் சிலப்பதிகார வரிகள் விருந்தின் சிறப்பை விளக்குகிறது.

"இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" (குறள்.81) எனும் குறளடிகள் விளக்குகிறது.

**ஒழுக்க நெறி**

"அறிவிழந்தோன் வாதில் தோற்பான்
வலியிழந்தோன் போரில் தோற்பான்
ஒழுங்கிழந்தோன் யாதிலும் தோற்பான்"

என்பது பழமொழி. இதன்மூலம் ஒருவனது வாழ்வில் உயர்வு தாழ்வு ஏற்பட அடிப்படையாக இருப்பது அவனது ஒழுக்கப் பண்பேயாகும். இவ்வொழுக்கத்தின் சிறப்பினை வள்ளுவர்,

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்" (குறள்.131)

எனும் குறளின் வாயிலாக உயிரினும் சிறந்தது ஒழுக்கமென்று மெய்ப்பிக்கின்றார்.

**சினங்கொள்ளாமை**

சினமென்பது அறிவை மழுங்கச் செய்யும் ஒரு ஆயதம். இது தன்னையும் அழித்து தனைச் சார்ந்தோரையும் கெடுக்கும் தன்மையுடையது. எனவே, பொறுமையின் உறைவிடமாக இருப்பவரை

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

இவ்வுலகம் நிறைவான மனிதரென்கிறது. எனவே, ஒருவன் தன்னைத்தானே காத்துக்கொள்ள வேண்டுமானால் சினம் ஏற்படாமல் காக்க வேண்டும்.

"சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று"(குறள்.307)

எனும் வள்ளுவரின் வரிகள் சினத்தால் உருவாகும் துயரினை விளக்கிக் காட்டுகிறது.

**நட்பு**

நட்பு என்பது இரத்த பந்தம் இல்லாத போதும், தன்னுயிரைக் கொடுத்தேனும் நமைக் காக்கத் துணியும் உண்மையான உறவாகும். இத்தகைய நட்பிற்கு கர்ணன் - துரியோதனன் நட்பு, கபிலர் - பாரி நட்பு என்று ஆயிரம் உதாரணங்களை அடுக்கிக் கூற இயலும். இத்தகைய நட்பிற்கு வள்ளுவர்,

"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு" (குறள்.786) என்று கூறி சிறந்த இலக்கணம் வகுக்கிறார்.

**முடிவுரை**

அறம் என்னும் சொல்லிற்கு ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, புண்ணியம், அறக்கடவுள், சமயம், கல்வி என்ற எட்டுவகையான பொருள்கள் உள்ளன. இவ்வெட்டுவகையான பொருள்கள் பெருவழக்காக வழங்கப்பட்டு வருவதோடு வேறு சில பொருள்களும் அருகிய வழக்காக வழங்கி வருகின்றன. ஞானம், அறச்சாலை, உண்ணா நோன்பு, தீப்பயன் உடைய சொற்களை வைத்துப் பாடுதல் என்பனவாகும். அறம் என்ற சொல்லிற்குரிய பொருள் பல்வேறு வகையாக பிற்கால மக்களுடைய மன நிலைக்கும், பழக்கவழக்கங்களுக்கும், தேவைகட்கும் ஏற்ற வண்ணம் மாற்றமும், வளர்ச்சியும் அடைந்திருக்கின்றன. ஆங்கிலத்தில் 'மொராலிட்டி' எனப்படும் சொல்லிற்குரிய பொருளையே நீதி என்னும் சொல் தமிழில் உணர்த்துகின்றன. இப்பொருளிலேயே நீதிநூல், நீதி இலக்கியம் என்னும் வழக்கு, தமிழ் மொழியில் கி.பி.ஆறாம் நூற்றாண்டையொட்டி வளர்ந்துள்ளது என்பதை அறியமுடிகிறது.

**பார்வை நூல்கள்**

**[1].** எஸ்.கௌமாரீஸ்வரி (ப.ஆ), **திருக்குறள் பரிமேலழகர் உரை**, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை, 2025

**[2].** முனைவர் ச.முத்துலட்சுமி, **அறயியலும் பண்பாடும்**, சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 2001

**[3].** துரைசாமி.ச.வே, **சங்க இலக்கியம்(தெளிவுரை)**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108. 2000

**[4].** வேங்கடசாமி நாட்டார், **மணிமேகலை**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மறுபதிப்பு, 1999

**[5].** சுப்ரமணியம்,ச.வே, **தொல்காப்பியம்(தெளிவுரை)**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை-108. 1999

**[6].** துரை.இராசாராம்(உ.ஆ), **பதினெண் கீழ்க்கணக்கு(தொகுதி.2)**, முல்லை நிலையம், சென்னை-90, 2009

**[7].** புலியூர் கேசிகன், **சிலப்பதிகாரம்(தெளிவுரை)**, பாரி நிலையம், சென்னை-108, 2017

[8]. மாணிக்கவாசகன்.ஞா, **திருமூலர் திருமந்திரம்**. சர்வோதய இலக்கியப் பண்ணை, மதுரை, 2009